கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
கலை கலாசார பீடம்
இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்பு
கலைமாணித்தேர்வு 2010/2011 (ஓகஸ்ட்/செப்ரெம்பர் 2013)

LIBRARY
02 OCT 2013
EASTERN UNIVER-

**SOCS – 2204** வேலை மற்றும் ஒழுங்கமைப்பு பற்றிய சமூகவியல்

**(Sociology of Work and Organaization)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி 1 இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி 11 இல் இருந்து ஒரு வினாவிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

பகுதி I

1) அ) சமூகவியலாளர்களின் பார்வையில் எத்தகைய தொழிற்பாடுகள் வேலை அல்லாதனவாய் (Non-Work) அமைகின்றன சுருக்கமாக தெளிவுபடுத்துக.
10 புள்ளிகள்

ஆ) வேலை தொடர்பான கருத்துக்களை முன்வைத்த தொல்சீர் சிந்தனையாளர்களுள் ஸ்பென்சர் (Spencer) மோரீஸ் (Morries) ஆகியோரின் பிரதான சிந்தனைகளை தெளிவுபடுத்துக.
15 புள்ளிகள்

2) அ) பணிக்குழுவாட்சியின் (Bureaucracy) தோற்றம் அதன் குணாம்சங்களை மக்ஸ் வேபர் ( Max Weber) எவ்விதம் விபரிக்கின்றார்?
10 புள்ளிகள்

ஆ) தொழிற்பிரிப்பு (Division of Labour) தொடர்பான Karl Marx, Max Weber இருவரதும் சிந்தனைகளை ஒப்பிடுக.
15 புள்ளிகள்

3) அ) வேலை என்னும் எண்ணக்கரு மனிதகுல பரிணாம வளர்ச்சிப் படிகளோடு இணைந்து விருத்தி பெற்ற பாங்கினை மிகச்சுருக்கமாக எடுத்துரைக்க.
10 புள்ளிகள்

ஆ) கைத்தொழிற்பாங்கான முதலாளித்துவ சமூகத்தின் ( Industrial Capitalist Society) பிரதான அம்சங்களை (Main Features) துலக்குக.
15 புள்ளிகள்

4) அ) வேலைச் சமூகவியலானது, எல்லாவகையான சமூகவியல் பிரிவுகளோடும் (Branches of Sociology) தொடர்புறும் தன்மையினை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
10 புள்ளிகள்

ஆ) இலங்கையில் வேலையின்மை நிலைமைகள் பற்றி எடுத்துரைத்து, அப்பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கான பரிந்துரைகளை முன்வைக்குக.

15 புள்ளிகள்

பகுதி II

5) "மனிதன் இயற்கையோடு கொண்டிருக்கும் உறவை துண்டிப்பது மட்டுமின்றி மனிதத்துவத்திற்கே விரோதமாக கைத்தொழிற் சமூகத்தின் உற்பத்தி நடவடிக்கை அமைகின்றது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை கார்ல் மாக்ஸ்சின் (Karl Marx) அந்நியமயமாதல் கோட்பாட்டின் துணைகொண்டு வியாக்கியானம் செய்க.

25 புள்ளிகள்

6) பால்நிலை அடிப்படையிலான அசமத்துவம் ( Gender Inequality) இலங்கையின் தொழிற்துறைகளில் பிரதிபலிக்கப்படும் தன்மைகளை எடுத்து விளக்கி பெண்கள் தொழிற்துறை சார்ந்து எதிர்கொள்ளும் சவால்களை ஒரு சமூகவியலாளராக நின்று பகுப்பாய்பு செய்க.

25 புள்ளிகள்